<u>கொடைக்கானல் நகராட்சி</u>

2018ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21ம் நாள் (21.08.2018) செவ்வாய்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு கொடைக்கானல் நகராட்சி நகர்மன்றக் கூடத்தில் தனி அலுவலர் தலைமையில் நடைபெறும் அவசரக் கூட்டம்.

முன்னிலை: ரா.முருகேசன், எம்.ஏ., எம்.பில்., பி.எல்., டி.பி.எம்.,
தனி அலுவலர்.

<u>மன்றப் பொருள்</u>

1) கொடைக்கானல் நகராட்சி அண்ணா சாலையில் உள்ள தினசரி சந்தை மாட்டிறைச்சி கடை நடத்துவது, சுகாதாரகேடு ஏற்படுத்துவது, நடவடிக்கை எடுக்க, திரு.S.ஆறுமுகம், 68 D, தமிழ்சங்கம் ரோடு, மதுரை அவர்களால், சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் பொது நல வழக்கு தொடர்ந்தது, வழக்கு எண்.WP.No.12968/2017க்கு ரூ.7500/– (ரூபாய் ஏழாயிரத்து ஐநூறு) எதிர்வாதுரை, டைப்பிங், நீதி மன்றத்தில் தாக்கல், மற்றும் நீட்டிப்பு விண்ணப்பம் தயார் செய்த வகையில் தொகை வழங்க கோரி வழக்கறிஞர் திரு.T.S.முகமது முகைதீன் கடிதம் அனுப்பி உள்ளார்.

மேற்கண்ட விபரப்படியான தொகையை வழக்கறிஞருக்கு வழங்க அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – 1) அனுமதிக்கலாம்.
2) அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்க நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1805/2017/எச்.1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **444, நாள். 21.08.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

2) இந்நகராட்சியில் 36 அரசு, அரசு உதவிபெறும் மற்றும் தனியார் பள்ளிகள் இயங்கி வருவதாகவும் இப்பள்ளிகளில் 12,000க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் கல்வி பயின்று வருவதாகவும் தற்சமயம் மழைக்காலம் தொடங்கி உள்ளதால் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருவதால் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கும், பொது மக்களுக்கும் தொடர்ந்து ஐந்து நாட்கள் வீதம் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை நில வேம்பு குடிநீர் வழங்க வேண்டியுள்ளதால் 500 கிலோ கிராம் நிலவேம்பு குடிநீர் பவுடர் வாங்கி வழங்க வேண்டுமென துப்புரவு ஆய்வாளர்கள் குறிப்பு கொடுத்துள்ளார்கள். இதன் பேரில் நகரில் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணி மேற்கொண்டு டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்க வேண்டி பொது மக்கள் மற்றும் மாணவ, மாணவியர்களுக்கு நில வேம்பு குடிநீர் வழங்குவதற்காக 500 கிலோ கிராம் நில வேம்பு குடிநீர் பவுடர் வாங்கி வழங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.9,90,000/– (ரூபாய் ஒன்பது இலட்சத்து தொன்னூறாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். (ந.க.எண்.7216/2015/எச்.1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **445, நாள். 21.08.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

3) 13.08.2018 அன்று நடைபெற்ற 7–வது மாநில உயர் மட்ட அதிகார குழு கூட்டத்தில் கொடைக்கானல் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் 2018–2019 திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் ரூ. 247.00 இலட்சம்

Biomining முறையில் குப்பைகளை அகற்றம் செய்திட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 22866/2018/P3 நாள்.20.8.2018–ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| Sl.No. | Name of the ULB | Bio Mining | |
|---|---|---|---|
| | | Quantity ( in Cu.m) | Project Cost (Rs. In Lakh) |
| 1 | Kodaikanal | 37500 | 247.00 |

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 22866/2018/P3 நாள்.20.8.2018–ல் Biomining முறையில் குப்பை கிடஙகில் உள்ள குப்பைகளை அகற்றும் பணியினை கீழ்க்கண்ட கால அட்டவணையின்படி மேற்கொள்ளவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிர்வாக அனுமதி மற்றும்
தொழில்நுட்ப அனுமதி 24.08.2018

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு 27.8.2018

ஒப்பந்தப்புள்ளி நாள் 10.9.2018

பணி உத்திரவு நாள். 15.9.2018

பணி முடிக்க வேண்டிய நாள் 30.10.2019

எனவே மேற்கண்ட விவரப்படி உரிய அனுமதிப் பெற்று அதன்படி பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 22866/2018/P3 நாள்.20.8.2018 மன்றத்தின் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** மன்றம் அனுமதிக்கலாம் ( கோப்பு ந.க.எண். 982/2018/இ1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **446, நாள். 21.08.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

4) 13.08.2018 அன்று நடைபெற்ற 7–வது மாநில உயர் மட்ட அதிகார குழு கூட்டத்தில் கொடைக்கானல் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் 2018–2019 திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் ரூ. 44.80 இலட்சம் மதிப்பீட்டில் 8 எண்ணம் இலகுரக வாகனஙகள் வாஙகிட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 22866/2018/P3 நாள்.20.8.2018–ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| Sl.No | Name of the ULB | Vehicles | | | | Project Cost (Rs. In Lakh) |
|---|---|---|---|---|---|---|
| | | Battery operated Vehicle | | Light Commercial Vehicle | | |
| | | No | Amount | No | Amount | |
| 1 | Kodaikanal | 0 | 0 | 8 | 44.80 | 44.80 |

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 22866/2018/P3 நாள்.20.8.2018–ல் Biomining முறையில் குப்பை கிடஙகில் உள்ள குப்பைகளை அகற்றும் பணியினை கீழ்க்கண்ட கால அட்டவணையின்படி மேற்கொள்ளவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிர்வாக அனுமதி மற்றும்
தொழில்நுட்ப அனுமதி 24.08.2018

| | |
|---|---|
| ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு | 27.8.2018 |
| ஒப்பந்தப்புள்ளி நாள் | 10.9.2018 |
| பணி உத்திரவு நாள். | 15.9.2018 |
| பணி முடிக்க வேண்டிய நாள் | 30.10.2018 |

எனவே மேற்கண்ட விவரப்படி உரிய அனுமதிப் பெற்று அதன்படி பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 22866/2018/P3 நாள்.20.8.2018 மன்றத்தின் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** மன்றம் அனுமதிக்கலாம் ( கோப்பு ந.க.எண். 982/2018/இ1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **447, நாள். 21.08.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

5) 13.08.2018 அன்று நடைபெற்ற 7–வது மாநில உயர் மட்ட அதிகார குழு கூட்டத்தில் கொடைக்கானல் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் 2018–2019 திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் Micro Compost Centre பணிக்காக ரூ. 149.20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 22866/2018/P3 நாள்.20.8.2018–ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 4 இடஙகளில் நுண்ணுரம் செயலாக்க மையம் அமைக்கும் பணிகள் மற்றும் அடிப்படை பணிகள் ( சாலை மற்றும் சுற்று சுவர்) மேற்கொள்வதற்கு கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| Sl.No | Name of the ULB1 | Micro Compost Centre (MCC) | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | No | Capacity | Core Infrastructure Cost in Lakhs | Other infrastructures cost ( Road & Compound wall ) | Project Cost (Rs. In Lakhs ) |
| 1 | Kodaikanal | 4 | 2 | 120.00 | 29.20 | 149.20 |

கொடைக்கானல் நகரம் ஓர் சர்வதேச சுற்றுலா நகரமாகும். இந்நகரின் மொத்த பரப்பளவு 21,45 சதுர கிலோ மீட்டர் ஆகும். இந்நகரின் 2011 ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 36451 ஆகும். இந்நகராட்சியின் உரக்கிடஙகானது நகரில் இருந்து 14 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. இந்நகரில் நாள் ஒன்றுக்கு 17 மெட்ரிக் டன் குப்பைகள் உரக்கிடஙகில் கொட்டப்பட்டு வருகிறது. எனவே, நகர் பகுதியில் கீழ்க்கண்ட நான்கு பகுதிகளில் நுண்ணுரம் செயலாக்க மையம் அமைக்கும் பணிகள் தேர்வு செய்யப்பட்டு இதற்கான மதிப்பீடுகள் நகராட்சி நிர்வாக ஆணையரக வழிகாட்டுதல் மற்றும் வரைபடத்தின்படி தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | அப்பர் லேக் சாலையில் நுண்ணுரம் செயலாக்க மையம் (Micro Composting Centre) அமைத்தல் | 39.00 |
| 2 | சிவனடி ரோட்டில் நுண்ணுரம் செயலாக்க மையம் (Micro Composting Centre) அமைத்தல் | 39.00 |
| 3 | ஆனந்தகிரி 4–வது தெருவில் நுண்ணுரம் செயலாக்க மையம் (Micro Composting Centre) அமைத்தல் | 39.00 |
| 4 | கொய்யாப்பாறை பகுதியில் நுண்ணுரம் செயலாக்க மையம் (Micro Composting Centre) அமைத்தல் | 39.00 |
| 5 | அடிப்படை வசதிகள் செய்தல் ( சாலை மற்றும் சுற்று சுவர் பணிகள் ) | 29.20 |
| | மொத்தம் | 185.20 |

கொடைக்கானல் நகரம் மலைப்பிரதேசமாக உள்ளதால் கட்டுமானப் பொருட்கள் மற்றும் தனிநபர் விலை விகிதம் ( Labour and Material Cost ) மற்ற நகரஙகளை விட கூடுதலாக உள்ளதால் மேற்கண்ட திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட 4 பணிகளுக்கு அடிப்படை வசதிகள் உட்பட ரூ. 149.20 இலட்சம் போக கூடுதலாக 36.00 இலட்சஙகள் ஆகிறது.

| | |
|---|---|
| தயார் செய்யப்பட்ட மதிப்பீடு | ரூ. 185.20 இலட்சம் |
| ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை | ரூ. 149.20 இலட்சம் |
| வித்தியாசம் = | ரூ. 36.00 இலட்சம் |

எனவே, கூடுதல் நிதியினை நகராட்சி பொது நிதியின் மூலம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு :</u>

1) நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 22866/2018/P3 நாள்.20.8.2018–ல் பணியினை மேற்கொள்ள தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, ஒதுக்கீடு போக கூடுதலாக உள்ள மதிப்பீட்டு தொகை ரூ. 36.00 இலட்சத்தினை நகராட்சியின் பொது நிதியின் மூலம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

2) நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின 20.8.2018 ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ள கால அட்டவணையின்படி நிர்வாக அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள அனுமதிக்கலாம்.
( கோப்பு ந.க.எண். 983/2018/இ1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **448, நாள். 21.08.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

ஒம்/–ரா.முருகேசன்,
தனி அலுவலர்,
கொடைக்கானல் நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
கொடைக்கானல் நகராட்சி.

கொடைக்கானல் நகராட்சி

2018ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28ம் நாள் (28.08.2018) செவ்வாய்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு கொடைக்கானல் நகராட்சி நகர்மன்றக் கூடத்தில் தனி அலுவலர் தலைமையில் நடைபெறும் சாதாரணக் கூட்டம்.

முன்னிலை: ரா.முருகேசன், எம்.ஏ., எம்.பில்., பி.எல்., டி.பி.எம்.,
தனி அலுவலர்.

1) நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் 01.04.2018 முதல் சொத்துவரி பொது சீராய்வு மேற்கொள்வது தொடர்பாக வெளியிடபட்டுள்ள கீழ்காணும் இரண்டு அரசாணைகள் நகர்மன்றதின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

Government of TamilNadu

ABSTRACT

Property tax - General Revision of Property Tax in the Greater Chennai Corporation/ Municipal Corporations / Municipalities and Town Panchayats – Order issued

Municipal Administration and Water Supply (MA.IV)Department

G.o.(Ms) No .73 Dated:19.07.2018

(திருவள்ளுவர் ஆண்டு 2049)
விளம்பி ஆடி–3)

Read:-

1. G.O(Ms) No.150 Municipal Administration and Water Supply (Election) Department, Dated 12.11 2007.
2. G O(Ms) No.110 Municipal Administration and Water Supply (Election) Department, Dated 25.06.2008.
3. From the Commissioner, Greater Chennai Corporation letter வ.து.ந.க.எண். ஜி1/9317/2018. dated 27.06.2018 and 16. 7.2018
4. From the Commissioner of Municipal Administration letter Roc No. 40032/2012/R1,dated 04.7.2018 and 13.7.2018.
5. From the Director of Town Panchayats letter Na.Ka. No.6783/2018/E5, dated. 04.07.2018.
6. Orders of the Hon'ble Division Bench of Madras High Court in W.P.No. 2730/18 Dated 17.07.2018.

*****

ORDER:-

In the Government Order first and second read above, orders and necessary guidelines were issued that the general revision of property tax in all Municipal Corporations, Municipalities, Third Grade Municipalities and Town Panchayats shall be taken up with effect from 01.04.2008,.as per the existing statutory provisions in the relevant Urban Local Bodies Act.

2. In the letter third, fourth and fifth read above, the Commissioner, Greater Chennai Corporation, Commissioner of Municipal Administration and the Director of Town Panchayats have requested to issue orders to carry out general revision of property tax in the Urban Local Bodies Acts as per the existing statutory provisions in the relevant urban Local Body Acts as follows:

| Sl.No | Description | Proposed revision of property tax |
|---|---|---|
| 1 | Residential buildings | Not more than 50% |
| 2 | Rented Residential buildings | Not more than 100% |
| 3 | Non Residential buildings | Not more than 100% |

3. In the order sixth read above among others the Hon'ble Division Bench of Madars high court has also directed the Principal Secretary, Municipal Administration and Water Supply Department to take a decision with regard to proposal submitted by the Commissioner, Corporation of Chennai within a period of two weeks regarding revision of property tax and report of the Court in the next hearing which has been fixed on 03.08.2018.

4. The Government after detailed examination of the proposals of the Commissioner, Greater Chennai Corporation, the Commissioner of Municipal Administration, the Director of Town Panchayats and also based on the directions of the Hon'ble Division Bench of Madras High court in W.P.No.2730 of 2018, have decided that the following general revision of Property Tax in Greater Chennai Corporation, Municipal Corporations, Municipalities, and Town Panchayats shall be taken-up with effect from the current half-year as per the existing provisions in the relevant Urban Local Bodies Act:-

| SI.No | Description | Proposed revision of property tax |
|---|---|---|
| 1 | Residental buildings | Not more than 50% |
| 2 | Rented Residential buildings | Not more than 100% |
| 3 | Non Residental buildings | Not more than 100% |

Necessary guidelines for the general revision of Property Tax will be issued by the Commissioner of Municipal Administration / Commissioner of Greater Chennai Corporation/Director of the Town Panchayats separately by following the stipulated guidelines.

(By order of the Governor)

HARMANDER SING
PRINCIPAL SECRETARY TO GOVERNMENT

To
The Commissioner of Municipal Administration,Chepauk,Chennai-5
The Commissioner , Greater Chennai Corporation ,Chennai-3
The Director of Town Panchayats, Kuralagam, Chennai-108.
The Commissioners of all Corporations,
The Director of Local Fund Audit, Chennai-600 108.
All the District Collectors,
The Commissioners of Municipal Corporations / Municipalities (through the Commissioner of Municipal Administration ,Chennai-5)
All the Executive Officers of Town Panchayats ( through the Director of Town Panchayats,Chennai-600 108)

Copy to :
The chief Minister's Office, Chennai-9
The Special Personal Assistant to the Hon'ble Minister (Municipal Administration, Rural Development and Special Implementation Programme, Chennai-9
The Private Secretary to the Principal Secretary to Government, Municipal Administration and Water Supply Department, Chennai -9
The Municipal Administration and Water Supply (OP2/Election/MC.1)Department Chennai-9

// Forwarded/by Order //

(Sd)xxxxxxxx
Section officer

Government of TamilNadu

ABSTRACT

Property tax - General revision of Property Tax in the Urban Local Bodies - Orders issued in G.O.(MS)No.73, Municipal Administration and Water Supply Department, Dated 19.7.2018 - Amendment to the Government Order - issued

Municipal Administration and Water Supply (MA.IV)Department

G.o.(Ms) No .76 Dated:26.07.2018

(திருவள்ளுவர் ஆண்டு 2049)
விளம்பி ஆடி–10)

Read:-

1. G.O(Ms) No.73, Municipal Administration and Water Supply Department, dated 19.07.2018
2. From the Commissioner of Municipal Administration letter Roc No.40032/2012/R1 dated 26.07.2018
3. From the Commissioner, Greater Chennai Corporation letter வ.து.ந.க.எண்.ஜி1/9317/2014 dated 26.07.2018.
4. From the Director of Town Panchayats letter Na.Ka.No.6783/2018/E5. Dated.26.07.2018.

*****

ORDER:-

In the Government Order first read above, orders have been issued for the general revision of property tax in the urban local bodies as Follows:-

| Sl.No | Description | Proposed revision of property tax |
|---|---|---|
| 1 | Residential buildings | Not more than 50% |
| 2 | Rented Residential buildings | Not more than 100% |
| 3 | Non Residential buildings | Not more than 100% |

2. In the letters second, third and fourth read above, the Commissioner of Municipal Administration , the Commissioner, Greater Chennai Corporation and the Director of Town Panchayats have now stated that the various Residents Welfare Association and general public have made representations that the 100% revision of property tax in respect of Rented Residential Buildings will cause lot of hardship, financial difficulties to Assessees and Tenants and hence requested to reduce the property tax revision from 100% on par with Residential Buildings. The Commissioner of Municipal Administration, the Director of Town Panchayats and the Commissioner, Greater Chennai Corporation have requested to reduce the proposed increase in tax on Rented Residential Buildings from 100% to 50%.

3. After examining the above proposals in detail, Government decides to accept the same and direct that the following amendment is issued to G.O (MS) No.73 Municipal Administration and Water Supply Department, dated 19.07.2018.

<u>AMENDMENT</u>

SL.No.2, in the Tabular Column, para 4, i.e. the Rented Residential Buildings - “Not more than 100 %” shall be deleted.

(By order of the Governor)

HARMANDER SING
PRINCIPAL SECRETARY TO GOVERNMENT

To
The Commissioner of Municipal Administration, Chepauk,Chennai-5
The Commissioner , Greater Chennai Corporation ,Chennai-3
The Director of Town Panchayats, Kuralagam, Chennai-108.
The Director of Local Fund Audit, Nandanam, Chennai-600 035.
All the Regional Director of Municipal Administration, (through the Commissioner of Municipal Administration)
The Commissioners of all Municipal Corporations /Municipalities (through the Commissioner of Municipal Administration,Chennai-5)
All the Executive Officers of Town Panchayats ( through the Director of Town Panchayats,Chennai-600 108)

<u>Copy to :</u>
The Chief Minister’s Office, Chennai-9
The Special Personal Assistant to the Hon’ble Minister (Municipal Administration, Rural Development and Special Implementation Programme, Chennai-9
The Private Secretary to the Principal Secretary to Government, Municipal Administration and Water Supply Department, Chennai -9
The Municipal Administration and Water Supply (OP2/Election/MC.1)Department Chennai-9

// Forwarded/by Order //

(Sd)xxxxxxxx
Section officer

அலுவலக குறிப்பு – இரண்டு அரசாணைகளையும் மன்றம் பதிவு செய்யலாம்.
(ந.க.எண்.2328/2018/அ1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **449, நாள். 28.08.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **பதிவு செய்யப்படுகிறது.** |

*******

**2)** கொடைக்கானல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.**1** முதல் **24** வரை உள்ள தெரு விளக்குகளை முழுவதுமாக தனியார் மூலம் இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணியினை மேற்கொள்ள முதன்மை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.**13899/2016**/DO**1**, நாள்.**21.07.2016**ல் அனுமதி அளிக்கப்பட்டு **10.08.2016**ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s.மாருதி டிரேடிங் கார்பரேசன், தேனி அவர்களின் ஒப்பந்தப்புள்ளி நகர்மன்ற தீர்மானம் எண்.**1641**, நாள்.**29.08.2016**ல் அங்கீகரிக்கப்பட்டு **30.08.2016** அன்று **01.09.2016** முதல் **31.08.2017** வரை இந்நகராட்சி தெரு மின்விளக்குகளை இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ள பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. **31.08.2018** உடன் ஒரு வருட காலம் முடிவடைவதால் நல்ல முறையில் பராமரிப்பு பணி மேற்கொண்டு வருவதால் மேலும் ஓராண்டுக்கு **(01.09.2018** முதல் **31.08.2019** வரை**)** இயக்குதல் மற்றும்

பராமரிப்பு பணி மேற்கொள்ளவும், LED விளக்குகள் அமைக்கும் பணி துவக்கும் வரை அல்லது ESCO மூலம் பராமரிப்பு மேற்கொள்ளுப்படும் காலம் வரை M/s.மாருதி டிரேடிங் கார்பரேசன், தேனி நிறுவனத்தின் மூலம் அதே ஒப்பந்த விலை விகிதப்படி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 01.09.2018 முதல் 31.08.2019 வரை ஒரு வருட காலத்திற்கு M/s.மாருதி டிரேடிங் கார்பரேசன், தேனி நிறுவனத்தின் மூலம் பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

*******

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **450, நாள். 28.08.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

3) <u>பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணைவிதிகள் 2016</u>

சுற்றுப்புறச்சூழல் பாதுகாப்பு சட்டம் 1986 (சட்ட எண்.29.1986)ல் பிரிவு 3இ 6 மற்றும் 25 களில் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் மத்திய அரசு பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை பணிகளை முறைப்படுத்த பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகள் 2016 ஐ இயற்றியுள்ளது. இந்த பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகள் 2016 அனைத்து நகராட்சிகளுக்கும் பொருந்தும்.

**<u>கொடைக்கானல் நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதிகள் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 306ன் கீழ் இயற்றப்பட்டது.</u>**

1.0. **தலைப்பு** : இவ்விதிகள் கொடைக்கானல் நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதிகள் 2016 என்று அழைக்கப்படும்.

2.0. **செயல்பாடு எல்லை:** இந்தத் துணைவிதிகள் கொடைக்கானல் நகரின் எல்லைக்கு உட்பட்ட அனைத்துப் பொது இடங்களுக்கும் மற்றும் நகர திடக்கழிவுகள் ஏற்படுத்தும் அனைவருக்கும் மற்றும் கொடைக்கானல்நகராட்சி எல்லைக்குள் தனியார் உரிமையில் அல்லது கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும் அனைத்து வளாகங்களுக்கும் பொருந்தும்.

3.0. **வரையறை:** இந்தத் துணைவிதிகளில் இதனுடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணைகளில் பயன்படுத்தப்பட்டுள்ள வரையறை செய்யப்படாத சொற்கள் மற்றும் அவை உணர்த்தும் பொருள் வெளிபாடுகள், சூழல் மாற்றாகக் கொள்ள தேவை இல்லை என்றால், முறையே கொடைக்கானல் நகராட்சி சட்ட **(மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920)** த்தில் கொடுக்கப்பட்டுள்ளவாறு இருக்கும் கீழ்கண்ட சொற்களின் பொருள்கள் இங்குப் பின்வருமாறு வரையறுக்கப்பட்டுள்ளன.

''சட்டம்'' :–சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம் 1986 (29 of 1986)

1. **அங்கீகரிகப்பட்ட உரிமையாளர்கள் : – (Brand owner)** பதிவு செய்யப்பட்ட சின்னத்தின் கீழ் அல்லது பெயரின் கீழ் பொருள்கள் விற்கும் நபர் அல்லது நிறுவனம்.
2. **தூக்குபைகள்: –** பொருள்களை சுமந்து செல்லும் வகையில் பிளாஸ்டிக் பொருள்கள் அல்லது மக்கும் தன்மையுள்ள பிளாஸ்டிக் பொருளால் செய்யப்பட்ட ஒரு தாங்கும் அம்சம் கொண்ட பைகள்.
3. **சரக்கு :–** விற்கவோ அல்லது வாங்கவோ செய்யப்படும் அனைத்து சந்தைப்படுத்தப்படும் பொருட்கள் அல்லது சாதனங்கள்
4. **உரமாகும் பிளாஸ்டிக் :–** உயிரியல் செயல் முறைகள் மூலம் பிளாஸ்டிக் உடைதலுக்கு உள்ளாக்ககூடிய வழக்கமான பெட்ரோ சார்ந்த பிளாஸ்டிக் தவிர்த்து அழைக்கப்படுகின்ற பிளாஸ்டிக்
5. **சிதைவு : –** ஒரு பொருளை மிகவும் சிறிய துண்டுகளாக ஆக்குதல்
6. **அங்கீகாரம் :–** மாநில மாசுக்கட்டுபாட்டு வாரியம் அல்லது மாசுகட்டுபாட்டுகுழு உள்ளாட்சி அமைப்பிற்கோ அல்லது நிறுவனத்திற்கோ அனுமதி அளித்தல்.
7. **துணை விதிகள் :–** உள்ளாட்சி அமைப்புகள் தங்கள் எல்லைகளுக்குள் விதிகளை திறம்பட செயல்படுத்தி எளிதாகவும் கட்டுப்பாட்டு கட்டமைப்பு

8. **நீடித்த தயாரிப்பாளர்கள் பொருப்பு:–** பிளாஸ்டிக், தகரம், கண்ணாடி மற்றும் நெளி பெட்டிகள் போன்ற பொருட்களின் இறுதிநிலை வரை சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிக்கா வண்ணம் பாதுகாப்பு தயாரிப்பாளரின் பொறுப்பு
9. **உணவு பொருள்கள்:–** சாப்பிட தயாராக உள்ள உணவு பொருள்கள் விரைவு உணவு, பதப்படுத்தப்பட்ட அல்லது திரவ உணவு, உணவுத்தூள், ஆகியவை உணவுப் பொருட்களில் அடங்கும்.
10. **வசதி :–** பிளாஸ்டிக் கழிவுகள் தொகுப்பு, சேமிப்பு மறுசுழற்சி, செயலாக்கம் மற்றும் அகற்றல் ஆகியவை மேற்கொள்ளப்படும் வளாகங்கள்.
11. **உற்பத்தியாளர் :–** ஒரு நபர் அல்லது நிறுவனம் பிளாஸ்டிக் உற்பத்தியில் ஈடுபடுவது
12. **பிளாஸ்டிக் தாள்:–** பிளாஸ்டிக் பொருளால் உருவாக்கப்பட்ட பிளாஸ்டிக் தாள்
13. **பிளாஸ்டிக் கழிவுகள் :–** பிளாஸ்டிக், பயன்படுத்திய பிறகு அல்லது திட்டமிடப்பட்ட பயன்பாடு முடிந்தவுடன் அப்புறப்படுத்தப்படுகின்ற பொருள்கள்
14. **மறுசுழற்சி :–** ஒதுக்கப்பட்ட பிளாஸ்டிக் கழிவுகளிலிருந்து புதிய தயாரிப்பு செய்வது.
15. **தண்டம் (Fine):–** பிளாஸ்டிக் கழிவுகள் உற்பத்தி செய்பவர்கள், செயலாக்கம் செய்பவர்கள் ஆகியோர் விதிகள் மற்றும் துணைவிதிகளை மீறும்பட்சத்தில் விதிக்கப்படும் தண்டம்.
16. **முறைசார கழிவு சேகரிப்பவர் (Informal waste collector):–** மறுசுழற்சி பொருள்களை சேகரித்தல், வகைபடுத்துதல், விற்பனை செய்தல், தனிநபர்கள், சங்கங்கள் அல்லது கழிவுபொருள்கள் பணியில் ஈடுபடும் கொள்முதல் செய்யும் வர்த்தகர்கள்.
17. **உள்ளாட்சி (local bodies) :–** இந்த விதிகளை செயல்படுத்தும் நோக்கில் இந்தியாவின் பல்வேறு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் நகரசபை, நகர் நிகாம், மாநகரசபை, நகர் பாலிகா, பரிஷத், நகராட்சி, பஞ்சாயத்து மற்றும் பேரூராட்சி, வரையறுக்கப்பட்ட (Notified) பகுதிகள் வரையறுக்கப்பட்ட தொழில்துறை குடியிருப்புகள் (Notified Industried Township) பல்வேறு பெயர்களில் அழைக்கப்படும் அமைப்புகள்.
18. **பொருட்கள் மீட்பு வசதி (Materials Recovery facility):–** உள்ளாட்சி அமைப்புகளாலோ அல்லது அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களாலோ திடக்கழிவுகளிலிருந்து மறுசுழற்சிக்குரிய முறைசாரா கழிவு சேகரிப்பவர்கள் அல்லது உள்ளாட்சி அமைப்பால் அங்கீகரிக்கப்பட்ட அல்லது பணி அமர்த்தப்பட்டவர்களால் மேற்கொள்ள ஏற்படுத்தப்பட்ட வசதி.
19. **வகை பிரித்தல் (sorting)** கலவையான கழிவுகளிலிருந்து பொருத்தமான கழிவுகளை பல்வேறு கூறுகளாக காகிதம், பிளாஸ்டிக், உலோகங்கள், கண்ணாடி என மறுசுழற்சி பொருள்களாக பிரித்தல்.
20. **தெரு விற்பனையாளர் (அ) தெரு ஓர சாலை வியாபாரிகள் (Street Vendor)–** ஒரு தெரு, சந்து, பக்க நடைபாதை, நடைபாதை, பொது பூங்கா அருகில் அல்லது வேறு எந்த பொது இடத்திலோ அல்லது தனியார் பகுதியில் ஒரு தற்காலிகமாக கட்டியெழுப்பப்பட்ட அமைப்பில் இருந்தோ, அல்லது ஒரு இடத்தில் இருந்து மற்ற இடத்திற்கு நகர்ந்து சென்றோ, சுற்றித்திரிந்தோ உணவுபொருள்கள், காய்கறிகள், பழங்கள், அன்றாட பயன்பாடு பொருளையோ விற்பவர்கள்.
21. **கழிவு உருவாக்குபவர் ( Waste Generator) :–** ஒரு நபர் அல்லது குழு குடியிருப்புகள் அல்லது குடியிருப்பு அல்லாத இடங்களில் வணிக நிறுவனங்கள், இந்திய ரயில்வே பகுதிகள், மற்றும் பாதுகாப்பு அமைப்புகள் உட்பட திடக்கழிவு உருவாக்குபவர்களை குறிக்கும்.
22. **முகமை ( Agency).:–** தெருவைப் பெருக்குதல், கழிவுகளை எடுத்தல், பயணர் கட்டணம் பெறுதல் போன்றவற்றிற்காக முகமைக்கும் கொடைக்கானல் நகராட்சிக்கும் ஒப்பந்த அடிப்படையில் கடமைகளை ஆற்றும் கொடைக்கானல் நகராட்சியால் அமர்த்தப்பட்ட அல்லது தனக்காகச் செயல்பட அதிகாரம் வழங்கப்பட்ட தனியார் நிறுவனம்.

**4.0 கழிவு உருவாக்குபவர்களின் கடைமைகள்:–**

1) கழிவு உருவாக்கும் ஒவ்வொருவரும் பிளாஸ்டிக் கழிவு உருவாக்கத்தை குறைக்கவும், பிளாஸ்டிக் கழிவுகளை உருவாக்கும் இடத்திலேயே பிரிக்கவும் திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 அல்லது அவ்வப்போது ஏற்படுத்தக்கூடிய விதிகளின்கீழ் செயல்பட வேண்டும்.
2) 50 மைக்ரான் அடர்த்தி அளவிற்கு குறைவாக அல்லது அரசால் அவ்வப்போது நிர்ணயிக்கப்படும் அடர்த்தி அளவிற்கு குறைவாக உள்ள ஏற்கனவே உபயோகப்படுத்தாத அல்லது மறுசுழற்சிக்கான அல்லது மக்கக்கூடிய கைப்பைகளை எந்த ஒரு நபரும் தயாரிக்கவோ அல்லது இருப்பு வைக்கவோ விநியோகிக்கவோ அல்லது விற்பனை செய்வதோ கூடாது. மீறினால் பொருள்களை பறிமுதல் செய்வதுடன் அபாரத அட்டவணையில் குறிப்பிட்டவாறு தண்டம் செலுத்த வேண்டி வரும்.
3) நகராட்சி எல்லைக்குள் ஒருமுறையே பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பைகள், பிளாஸ்டிக் கேரிபைகள், பிளாஸ்டிக் பூசப்பட்ட தட்டுக்கள், பிளாஸ்டிக்கப்புகள், பிளாஸ்டிக் டம்ளர்கள், பிளாஸ்டிக் மேஜைவிரிப்புகள், பிளாஸ்டிக் தாள்கள் ஆகியவையும் தடை செய்யப்படுகின்றன. மீறினால் பொருள்களை பறிமுதல் செய்வதுடன் அபாரத அட்டவணையில் குறிப்பிட்டவாறு தண்டம் செலுத்த வேண்டி வரும்.
4) மறுசுழற்சிக்கான அல்லது மக்கக்கூடிய பொருள்களை பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட கைப்பைகளைக் கொண்டு உணவுப் பொருட்களை சேமிக்கவோ அல்லது எடுத்து செல்லவோ விற்பனை செய்யவோ அல்லது மொத்தமாக கட்டவோ கூடாது.
5) பிளாஸ்டிக் கழிவுகளை தெருக்களிலோ, பொது இடங்களிலோ, சாலை ஓரங்களிலோ, நீர்நிலைகளிலோ, நீர்க்கால்களிலோ போடக் கூடாது. மீறினால் அபராத அட்டவணையில் குறிப்பிட்டவாறு தண்டம் செலுத்தவேண்டி வரும்.

6) வீடுகளில் உருவாகும் பிளாஸ்டிக் கழிவுகள் உருவாகும் இடத்திலேயே தனியாக பிரித்து சேகரித்து உள்ளாட்சி அமைப்பிடமோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட முகமை இடமோ, அல்லது அங்கீகரிக்கப்பட்ட மறுசுழற்சி செய்பவர்களிடமோ, அல்லது அங்கீகரிக்கப்பட்ட குப்பை சேகரிப்பவர்களிடமோ வழங்க வேண்டும்.

7) உணவு விடுதிகள், பிற நிறுவனங்கள், அலுவலகங்கள் ஆகியவற்றில் உருவாக்கப்படும் பிளாஸ்டிக் கழிவுகளை உள்ளாட்சி அமைப்பிடமோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட முகமை இடமோ, அல்லது அங்கீகரிக்கப்பட்ட மறுசுழற்சி செய்பவர்களிடமோ, அல்லது அங்கீகரிக்கப்பட்ட குப்பை சேகரிப்பவர்களிடமோ வழங்க வேண்டும்.

8) கழிவுகள் உருவாக்கும் அனைவரும் நகராட்சியால் ஏற்படுத்தப்பட்ட துணை விதிகள் சேகரிப்பு மற்றும் மேலாண்மை வசதிகளுக்குரிய பயனர் கட்டணம் செலுத்த வேண்டும்.

9) திறந்தவெளியில் நிகழ்ச்சி நடத்தும் நிகழ்ச்சி அமைப்பாளர்கள் நிகழ்ச்சியின் போது உருவாகும் பிளாஸ்டிக் கழிவுகளை தனியாக பிரித்து உள்ளாட்சி அமைப்பிடமோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட முகமை இடமோ, அல்லது அங்கீகரிக்கப்பட்ட மறுசுழற்சி செய்பவர்களிடமோ, அல்லது அங்கீகரிக்கப்பட்ட குப்பை சேகரிப்பவர்களிடமோ வழங்க வேண்டும்.

10) பிளாஸ்டிக் குப்பைகளை உருவாக்குபவர்கள் யாரும் தங்களால் உருவாக்கப்படுகின்ற பிளாஸ்டிக் குப்பைகளினை தெருக்களிலோ, பொது இடங்களிலோ, நீர்நிலைகளிலோ, எறிவதோ, எரிப்பதோ அல்லது புதைப்பதோ கூடாது.

## 5.0 குறியீடு மற்றும் பெயரிடல் (Marking and Labelling):–

1. ஒவ்வொரு பிளாஸ்டிக் கேரி பையிலும் கீழ்கண்ட விவரங்கள் ஆங்கிலம் அல்லது உள்ளூர் மொழியில் அச்சடித்து இருக்க வேண்டும்.

   a) தயாரிப்பாளர் பெயர், பதிவு எண். பையின் அடர்த்தி (Thickness)
   b) பலஅடுக்கு பைகளாக (multileyared packing) இருப்பின் தயாரிப்பாளர் பெயர் மற்றும் பதிவு எண் குறிப்பிட வேண்டும்.

2. ஒவ்வொரு மறுசுழற்சி கைப்பைகளிலும், ''மறுசுழற்சிக்கானவை'' என இந்திய தரநிர்ணயம் IS.14534.1998 –ல் தெரிவிக்கப்பட்டுள்ள மற்றும் அதன் அடிப்படையில் அவ்வப்போது மறுசுழற்சிக்கான பிளாஸ்டிக் குறித்து அறிவிக்கப்படும் வழிகாட்டுதலின்படி இருக்க வேண்டும்.

## 6.0. கடைக்காரர்கள் சில்லரை விற்பனையாளர்கள் மற்றும் தெரு விற்பனையாளர்கள் பொறுப்பு

1. சில்லரை விற்பனையாளர்கள் மற்றும் தெரு விற்பனையாளர்கள் விதிகள் கீழ் பரிந்துரைக்கப்படும் குறியீடுகள் மற்றும் பெயர்கள் இல்லாத கேரி பைகள் அல்லது பிளாஸ்டிக் தாள் அல்லது பலஅடுக்கு பேக்கேஜ் ஆகியவற்றை விற்கவோ அல்லது அவற்றின் பொருட்கள் வழங்கவோ கூடாது அவ்வாறு விற்பது தண்டனை குற்றம். இதுஅபராத அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு தண்டம் செலுத்தவேண்டி வரும்.
2. பொருட்களை 50 மைக்ரானிற்கு மேற்பட்ட கேரி பைகளில் வழங்க தயாராக உள்ள கடைகாரர்கள், தெரு விற்பனையாளர்கள், சில்லரை விற்பனையாளர்கள் நகராட்சியில் வருடத்திற்கு ரூ.48,000/– (மாதம் ரூபாய் 4,000/–) பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை கட்டணம் செலுத்தி பதிவு செய்ய வேண்டும். ஆண்டுதோறும் கட்டணம் செலுத்தி பதிவை புதுப்பிக்க வேண்டும்.
3. நகராட்சியில் பதிவு செய்யப்பட்ட விற்பனையாளர்கள் பிளாஸ்டிக் கேரிபைகள் வழங்க கட்டணம் வசூலிக்கப்படும் என முக்கிய இடத்தில் காட்ட வேண்டும்.
4. நகராட்சியில் பதிவு செய்யப்பட்ட கடைகாரர்கள் சில்லறை விற்பனையாளர்கள் மற்றும் தெரு விற்பனையாளர்கள் மட்டுமே கேரிபைகள் வழங்க தகுதி உடையவர்கள் பதிவு செய்யாமல் பிளாஸ்டிக் கேரி பைகள், விற்பனை பொருட்கள் வழங்குதல் ஆகியவை தண்டனைகுரிய குற்றம். இதுஅபராத அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு தண்டம் செலுத்தவேண்டி வரும்.

## 7.0. நகராட்சியின் கடமைகள்:

a) பொருட்களை 50 மைக்ரானிற்கு மேற்பட்ட கேரி பைகளில் வழங்க தயாராக உள்ள கடைகாரர்கள் தெரு விற்பனையாளர்கள், சில்லரை விற்பனையாளர்களை பதிவு செய்து சான்று வழங்கல்.
b) பிளாஸ்டிக் கழிவுகளை பாதுகாப்பான முறையில் சேகரித்து இருப்பு வைத்து தரம் பிரித்து எடுத்து சென்று முடிவு செய்தலை உறுதி செய்ய வேண்டும்.
c) பிளாஸ்டிக் கழிவுகளை முடிவு செய்யும்போது சுற்றுப்புற சூழல் பாதிக்காவண்ணம் மேற்கொள்ள வேண்டும்.
d) பிளாஸ்டிக் கழிவுகளை சேகரிக்கும் பணியில் தயாரிப்பாளர்களையும் பங்குபெற செய்ய வேண்டும்.
e) மறுசுழற்சிக்கான வழிகளை உறுதி செய்ய வேண்டும்
f) கழிவுகளை கையாளும் பணியில் தனியார் நிறுவனங்கள் குழுக்கள் மற்றும் கழிவு சேகரிப்போரையும் பங்கேற்க செய்ய வேண்டும்
g) பிளாஸ்டிக் கழிவுகளை திறந்த வெளியில் எரிப்பதை தடை செய்து அதனை உறுதி செய்ய வேண்டும்.

h) தகவல், கல்வி தொடர்பின் மூலம் பொது மக்களுக்கும், கழிவுகளை உற்பத்தி செய்பவர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

**8.0 இந்த துணைவிதிகளை மீறினால் செலுத்தும் தண்டம்**

8.1 இந்த துணை விதிகள் தொடங்கிய நாளும் அதற்கு பின்பும் பழக்கப்படும் / எச்சரிக்கை காலம் 90 நாட்கள் உண்டு. அதற்கு பிறகு இந்த துணை விதிகளை மீறுதல் இருந்தால் அபராத அட்டவணை (அட்டவணை –1 ன்படி) இந்த துணைவிதி மீறும் நிகழ்வு ஒவ்வொன்றிற்கும் அபராத தொகையுடன் தண்டிக்கப்படுவர். கழிவு உருவாக்குபவர் இந்த துணைவிதிகள் ஏதாவது ஒன்றினை மீறுவதாக கண்டால் அடுத்த முறை தண்டத்தொகை இரட்டிப்பாகும்.
8.2 துணை விதிகளை மீறும் யாராவது ஒருவர் அல்லது மாசுப்படுத்துபவர் அட்டவணை 1ல் குறிப்பிட்டுள்ளபடி தண்டத் தொகை கட்ட இயலவில்லை என்றால் அவன் / அவள் –க்கு எதிராக நகர காவல் சட்டம் மற்றும் மாவட்ட காவல் சட்டம் / இந்திய குற்றவியல் நடைமுறை சட்டத்தின்படி வழக்கு தொடரப்படும்

**9.0 தண்டணை:**

துணை விதிகளில் குறித்துள்ள விதிகளை மீறுபவர் அல்லது துணை விதிகளில் குறித்துள்ள விதிகளை மீறும் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு பாதுகாவலனாக இருப்போர் நடைமுறையில் உள்ள சட்டத்தின் அடிப்படையில் தண்டனைக்கு உரியவர் என கருதப்படுகின்றனர்.

**10.0 மேல்முறையீட்டிற்கு உரிமை:**

கொடைக்கானல் நகராட்சி திடக்கழிவு மேலாண்மை துணை விதிகள் 2016 ஆல் இடர் உற்ற அல்லது பாதிப்படைந்த யாரும் ஆணையாளருக்கு மேல்முறையீடு செய்ய உரிமை உள்ளவர்கள் ஆவர்.

**அபராதக் கட்டணம்**
**அட்டவணை – 1**

| வ. எண். | துணை விதிகள் | உட்பிரிவும் / துணை விதிகள் விளக்கமும் | சட்டத்தை மீறினால் செலுத்தவேண்டிய தண்டத் தொகை |
|---|---|---|---|
| 1 | 4(2) | 50 மைக்ரான் அடர்த்திக்கு குறைவான பிளாஸ்டிக் கேரி பைகள் பயன்படுத்துதல்<br><br>தயாரித்தல்<br>இருப்பு வைத்தல்<br>விநியோகித்தல்<br>விற்பனை செய்தல் | பொருள் பறிமுதலுடன்<br><br>5000 /–<br>4000 /–<br>2000 /–<br>1000 /– |
| 2 | 4(3) | ஒருமுறையே பயன்படுத்தப்பட்டு வரும் பிளாஸ்டிக் பைகள், பிளாஸ்டிக் கேரி பைகள், தட்டுகள், டம்ளர்கள், மேஜை விரிப்புகள், பிளாஸ்டிக் தாள்கள் | பொருள் பறிமுதலுடன் 2000 /– |
| 3 | 4(4) | பிளாஸ்டிக் பைகளில் உணவு பொருள்களை சேமித்தல் , விற்பனை செய்தல் | பொருள் பறிமுதல் 2000/– |
| 4 | 4(5) | பிளாஸ்டிக் கவர்களை நீர்நிலைகளில் போடுதல் | 1000/– |
| 5 | 4(6) | வீடுகளில் பிளாஸ்டிக் கழிவுகளை தனியே வழங்காமல் இருத்தல் | 100 /– |
| 6 | 4(7) | உணவகங்கள், அலுவலகங்கள் பிளாஸ்டிக் கழிவுகளை தனியே வழங்காமல் இருத்தல் | 2000/– |
| 7 | 4(9) | திறந்தவெளியில் நிகழ்ச்சி நடத்துபவர்கள் பிளாஸ்டிக் கழிவுகளை முறையாக வழங்காமல் இருத்தல் | 2000/– |
| 8 | 4(10) | பிளாஸ்டிக் கழிவுகளை எரித்தல்<br>தனி நபர்<br>நிறுவனம் | <br>500 /–<br>2000 /– |
| 9 | 6(1) | குறியீடு அல்லது பெயர் இல்லாத பிளாஸ்டிக் பைகள் விற்பனை அல்லது பொருட்கள் வழங்குதல் | பொருள் பறிமுதல் 2000 /– |
| 10 | 6(4) | பதிவு செய்யாமல் பிளாஸ்டிக் கேரிபைகள் விற்பனை செய்தல், பொருள் வழங்குதல் | பொருள் பறிமுதல் 5000 /– |

மேற்காணும் துணை விதிகளை மீறுபவர்கள் மீது தமிழ்நாடு 1920 நகராட்சிகள் சட்டம் பிரிவுகளின் கீழ் சட்டப்படியான நடவடிக்கை தொடரப்படும். மேலும், 1986 ஆம் ஆண்டு மத்திய அரசின் சுற்றுச் சூழல் பாதுகாப்பு சட்டம் பிரிவு 15–ன் படி, கொடைக்கானல் நகராட்சியின் சுற்றுச் சூழலுக்கு எதிரானதாக செயல்பட்டதாக கருதி உரிய நடவடிக்கை தொடரப்படும்.

துணை விதிகளில் குறிப்பிட்டுள்ள செய்யக் கூடாத செயலை செய்யும் நபருக்கு தண்டனையாக ரூ.2000/– அபராதம் விதிக்கப்பட்டு வசூலிக்கப்படும்.

தொடர் குற்றங்களுக்கு கூடுதலாக தினசரி ரூ.100/– வீதம் விதிக்கப்பட்டு வசூலிக்கப்படும்.

மேலும், விதிகளில் கூறப்பட்டுள்ள நிர்வாக கட்டணங்களை விதித்தல், வசூல் செய்தல், அபராதக் கட்டணங்களை வசூல் செய்தல் மற்றும் அவற்றின் தொடர் நடவடிக்கை ஆகியவற்றிற்கு, நகராட்சியின் ஆணையாளருக்கு நகர்மன்றத்தால் அதிகாரம் வழங்கப்படுகிறது.

இச்செயல்பாடுகள் அனைத்தும் அமுல்படுத்தும் வகையில் இது தொடர்பாக பொதுமக்களது கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகள் பெற நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டதில் எவ்வித ஆட்சேபனையும் நேரிலோ எழுத்துப்பூர்வமாகவோ தெரிவிக்கப்படவில்லை எனவே மாவட்ட அரசிதழில் வெளியீடு செய்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலக குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மாவட்ட அரசிதழில் அறிவிப்பு வெளியிட்டு நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்885/2017/எச்1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **451, நாள். 28.08.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

*******

4) கொடைக்கானல் நகராட்சிப் பகுதிகளில் ஏரியைச் சுற்றிலும், சுற்றுலாத் தளங்களிலும் வருகை தரும் பொது மக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் குப்பைகளை ஆங்காங்கே வீசிவிட்டு சென்று விடுவதால் ஏரியைச் சுற்றிலும் சுமார் 50 மீட்டர் தொலை தூரத்திலும், ஏனைய சுற்றுலா தலங்களில் குப்பைகளை சேகரிக்க வசதியாக பொது சுகாதாரம் அவசியம் கருதி 80 லிட்டர் கொள்ளளவு உள்ள பிளாஸ்டிக் குப்பைத் தொட்டிகள் சுமார் 100 (நூறு) எண்ணிக்கை, உரிய விதிகளின்படி, விலைப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளவும், இதற்கு ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.2,00,000/– (இரண்டு இலட்சம்) க்கும், இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) விலைப்புள்ளி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3) இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.2114/2018/எச்.1)

| | |
|---|---|
| **நகர் மன்றதீர்மானம் எண் மற்றும் நாள் :** | **452, நாள். 28.08.2018.** |
| | |
| **நகர் மன்ற தீர்மானம் :** | **அனுமதிக்கப்படுகிறது.** |

ஒம்/–ரா.முருகேசன்,
தனி அலுவலர்,
கொடைக்கானல் நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
கொடைக்கானல் நகராட்சி.